பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 14 சனிக்கிழமை 27.03.2021 கதிர் 142

### இனி இது ரகசியம் அல்ல!

பங்களாதேஷ் சென்று வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சத்தம் சந்தடியை அதற்குப் பின்னர் காணவில்லை.

என்ன ஏது என்று விசாரிக்கப் புறப்பட்டேன். ஏற்கனவே முழுங்காலில் அவருக்கு சுகவீனம் இருந்தது. அதிக நேரம்

பக்கம்02 »

மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் உட்பட

## யாழ்ப்பாணத்தில் நேற்று 26 பேருக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 26 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 29 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ சேவையாளர்கள் உட்பட 19 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞2

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு தேவையற்று வராதீர்!

## மக்களிடம் நிர்வாகம் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சேவைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வசதியாக தேவையற்ற வருகைகளைத் தவிர்க்குமாறு நிர்வாகம் கேட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத்துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

☞2

## இத்தாவிலில் ரிப்பர் - கார் மோதல் தந்தையும் இரு சிறுவர்களும் பலி



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.27

கிளிநொச்சி இத்தாவில் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற ரிப்பர் - கார் விபத்தில் இரு சிறுவர்களும் அவர்களின் தந்தையும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் 9 ☞2

## 'கொரோனா' அபாயத்தால் யாழ்.மாநகர மத்தி முடக்கம்

(விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நின்று பேசுவதோ, நீண்டதூரம் நடப்பதோ, படி ஏறுவதோ அவரின் வயது மூப்புக்காரணமாக அவருக்குச் சிரமமாக இருந்தது.

அதற்க. அவர் அறுவை சிகிச்சை பெறுகின்றார் எனத் தென்னிலங்கை ஊடகவியலாளர் சொன்னார். கொழும்பிலிருக்கும் அவர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் என்னிடம் இது பற்றி விசாரிக்க எண்ணியிருந்தார் எனவும் சொன்னார். அவர் தகவல் தவறு என்றேன்.

ஏற்கனவே, பிரதமர் மஹிந்தவை ஓய்வு எடுக்கும்படி மகன்மார் வற்புறுத்தி வந்தனர். ஆனால் அதற்கு இசையாமல் தினசரி நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்தி அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் பிரதமர்.

இப்போது அவர் பங்களாதேஷ் சென்றமையைப் பயன்படுத்தி அவரை வீட்டில் முடக்கி விட்டனர் பிள்ளைகள். வெளிநாடு சென்று திரும்பியமையால் தனிமைப்படுத்தல் நடவடிக்கை கட்டாயம் என்று கூறி தந்தையாரான பிரதமரை ஒரு வார காலம் வீட்டில் தனிமைப்படுத்தி ஓய்வெடுக்கச் செய்து விட்டனர் மகன்மார்.

ஒரு வார கால கட்டாய ஓய்வின் – சுய தனிமைப்படுத்தலின் – பின்னர் இன்று வழமையான பணிக்கு அவர் திரும்புகின்றார் என்று தெரிகின்றது.

★ ★ ★

யாழ்.நகரத் திள் முடக்கத்தினால் வர்த்தகர்கள் பலர் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்காரும் பெரும் இக்கட்டு நிலைமை. புதுவருட வியாபாரத்தை நம்பி உடுபுடவைகள், துணி மணிகள் மற்றும் பொருள்களுக்கு பெரும் முதலிட்டவர்கள் எல்லாம் என்ன செய்வது என்று தெரியாமல் முழுசிக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த வருடப் பிறப்பும், இதே கதிதான். இம்முறையும் அதுதான் நிலைமை என்றால் பல வர்த்தகர்கள் தற்கொலை செய்யும் அளவுக்கு நிலைமை மோசமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நகரத்தில் ஒரு தொகுதிக் கட்டடங்களை மட்டும் தனிமைப்படுத்தி எதைச் சாதிக்கப் போகின்றார்களோ என்று தலையில் அடித்துக் கொண்டார் ஒரு வர்த்தகர். அவர் விசனத்திலும் ஒரு நியாயம் இருப்பதாகவே எனக்குப்படுகின்றது.

★ ★ ★

நேற்று முன்தினம் கொழும்பில் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்குப் பேட்டியளித்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பேட்டிக்கிடையே ஒரு விடயத்தை நாசூக்காகக் கிண்டிவிட்டார்.

“முன்னர் நாங்கள் மட்டக்களப்புக்குச் சென்றால் கட்டாயம் கட்சியின் செயலாளராக இருந்த துரைராஜசிங்கத்தைச் சந்திக்காமல் திரும்ப மாட்டோம். இந்த முறை புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி எம்.பியான சாணக்கியன் யாழ்ப்பாணம் வந்து இரண்டு, மூன்று நாள்கள் தங்கிச் சென்றார். ஆனால் அவர் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவைச் சந்திக்கவேயில்லை.” – என்ற சாரப்பட்ட கருத்தில் அமைந்தது சிறீதரனின் வத்தி.

அவர் சொன்ன தகவல் சரி. யாழ். வந்த சாணக்கியன் மாவை சேனாதிராசாவைச் சந்திக்கவில்லை என்பது உண்மைதான். சாணக்கியன் மாவையைச் சந்திக்க முயன்றார். தொலைபேசியில் மாவையுடன் பேசி அதற்கு நேரம் ஒதுக்க எத்தனித்தார். ஆனால் மாவைதான் அந்த, இந்தக் காரணத்தைச் சொல்லி மெல்ல வெட்டி விட்டார் என அறிய வந்தது. அதனால் சாணக்கியனுக்கும் சிறிது மனவருத்தம்.

குறுகிய காலத்தில் இளம் வட்டத்திடையே அதிகம் பேரெடுத்து விட்ட சாணக்கியன், யாழ்ப்பாணத்துக்கு சுமந்திரன் அணியின் 'புறொக்கிறாமில்' வந்த கோபம் தான் காரணமாம்...! நல்ல தலைமை.... நல்ல கட்சி... பாருங்கோ...!

– மின்னல் –

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் இருவர், தாதியர்கள் மூவர் உள்பட நிந்தர பணியாளர்கள் 9 பேரும் மருத்துவ பீட மாணவர்கள் இருவர், தாதிய மாணவர் ஒருவரும், சுத்திகரிப்பு பணியாளர் ஒருவரும் என 13 பேர் இன்று கோரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உயர்மட்டக் கூட்டம் நேற்றிரவு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மேற்படி விடயத்தை வலியுறுத்தினார்.

போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத்துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும்.

கிளினிக் பெறும் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நோயாளர்களைப் பார்வையிட வருவோர் தவிர்க்கவேண்டும்.

போதனா வைத்தியசாலைக்குள் தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். – என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இத்தாவிலில் ரிப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் 12 வயதையுடைய தர்மக்கேணி பளையைச் சேர்ந்த இரு சிறுவர்களும் தந்தையும் உயிரிழந்துள்ளனர்.

இத்தாவில் பகுதியில் இருந்து மணல் ஏற்றியவாறு ஏ9 வீதியில் ஏற முற்பட்ட ரிப்பர் வீதியால் பயணித்த காரை மோதித் தள்ளியுள்ளது. காரில் படுகாயமடைந்த தந்தை மற்றும் இரு மகன்களை உடனடியாக பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் சிறுவர்கள் இருவரும் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இதேநேரம் படுகாயமடைந்த தந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றிரவு அங்கு உயிரிழந்துள்ளார்.

இதேநேரம் ரிப்பரின் சாரதி சம்பவ இடத்தில் இருந்து ஓடித் தப்பியுள்ளார் என்றும் கூறப்பட்டது.

# முன்னாள் பத்திரிகையாளரான சைவப் பெரியார் காலமானார்



ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியர் பொன்னாலையூர் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் (வயது– 77) இன்று உயிரிழந்தார். படையினரின் வாகனம் மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இவர் உயிரிழந்தார்.

கடந்த 20 ஆம் திகதி மதியம் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது யாழ். பன்றிக்கோட்டு பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் படையினரின் வாகனம் இவரை மோதியது. தலையில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

'ஈழநாடு' பத்திரிகையின் தலைமை ஒப்புநோக்குநராக இருந்த இவர் பின்னர் உதவி ஆசிரியராக உயர்ந்தார். ஊடகத்துறையில் பணியாற்றிய காலத்தில் பல ஊடகவியலாளர்களை உருவாக்கினார். அவரிடம் பயிற்சி பெற்ற சிலர் இன்றும் ஊடகத்துறையின் சிரேஷ்ட ஊடகவியலாளர்களாக பணியாற்றுகின்றனர்.

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் தலைமை அர்ச்சகராகவும் அக்கோயிலின் பரிபாலகராகவும் இறுதிவரை இருந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்தை ஆரம்பித்து வருடாந்தம் அதை நடத்திவந்தார்.

தமிழ், சமஸ்கிருதம், சமயம், இலக்கியம் போன்ற பல்துறை விற்பன்னரான இவர் பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். யாழ்.பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியின் விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை தொகுதி தமிழ்ச் சங்கத்தின் பல்வேறு பதவிநிலை செயற்பாட்டாளராகவும், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சை செயலாளராகவும், வெண்கரம் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார்.

மாணவர்களுடனும் பெரியவர்களுடனும் அன்பாக பழகும் மனிதநேயப் பண்புமிக்க இவர் ஆயிரக்கணக்கான நிகழ்வுகளில் பங்குபற்றி மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அறிவுரை கூறியவர். கல்விமான்கள் பல இடங்களிலும் இருந்து இவரது ஆலயத்திற்கு வருகைதந்து அறிவுரைகளைக் கேட்டுச் செல்வதை அடிக்கடி வழக்கமாக்கிக் கொண்டனர்.

பொன்னாலை ஸ்ரீகண்ணன், ஸ்ரீகிருஷ்ணன் சனசமூக நிலையங்களுடன் இணைந்து வெண்கரம் பொன்னாலையில் கடந்த 10 ஆம் திகதி நடத்திய கல்விச் சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுரை கூறி மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார். இதுவே அவர் இறுதியாக பங்குபற்றிய நிகழ்வு என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 2022இல் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஆரம்பம்

## அரசுக்கு தயான் ஜயதிலக எச்சரிக்கை



வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் விசேட நீதிமன்றத்தை நிறுவி உள்ளக விசாரணையை இலங்கை முன்னெடுக்காவிட்டால் சர்வதேச பொறிமுறை செயற்படத் தொடங்கிவிடும். அதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

– இவ்வாறு ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் சிரேஷ்ட இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்துவரும் அமர்வுகளில் என்ன நடக்கும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை விவகாரம் தொடர்பில் 6 மாதங்களுக்கு ஒருதடவை மீளாய்வு செய்யப்படும். 2022 செப்டெம்பர் வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் திரட்டப்படும் ஆவணங்கள் எல்லாம் 2022 செப்டெம்பருக்குப் பின்னர் உலக நாடுகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும். அவ்வாறு நடைபெற்றால் குறைந்த பட்சம் தீர்மானத்தை ஆதரித்த 22 நாடுகளிலாவது வழக்குத் தொடுக்கப்படும்.

இவ்வாறு வழக்குத் தொடுத்தாலும் எதுவும் செய்யமுடியாது என இலங்கை அரசு சவால் விடுக்கும் பட்சத்தில் அடுத்தக் கட்ட நடவடிக்கையாக, முதலீடு, சுற்றுலாத் துறை, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் இறுக்கமான போக்கு கடைபிடிக்கப்படும்.

எனினும், இலங்கைக்கு இன்னுமொரு வாய்ப்பு எஞ்சியுள்ளது. 2022 செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் சேர். டெஸ்மன் டி சில்வாவாலும் (பரணகம ஆணைக்குழு), அதற்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவாலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கமைய நம்பகமான விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

தங்களுக்கு விசுவாசமான நீதிபதிகளை நியமிக்காமல், உலகம் ஏற்றுக்கொள்கின்றவர்களை அல்லது வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை நீதிபதிகளை உள்ளடக்கிய வகையில் விசேட நீதிமன்றமொன்றை நிறுவி, விசாரணைகளை முன்னெடுத்து தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களுக்கும் அழைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் சர்வதேச பொறிமுறை செயற்பட ஆரம்பித்துவிடும். இலங்கை விவகாரம் ஏற்கனவே சர்வதேசமயப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் பொறிமுறை செயற்படவில்லை. இனி செயற்படத் தொடங்கினால் அதனை நிறுத்த முடியாது – என்றார்.

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா !!!

Australian Skilled – Recognised Graduate Visa for Junior Engineers (Graduated within 2 years)

18 Months to work and gain experience in Australia.

தகைமைகள்:
- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
- BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் - IELTS average 6

தொடர்புக்கு:- HOTLINE: : 0766228891
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணைக்கு சென்ற பொலிஸ் ஜீப் தாக்கு!

குளியாபிட்டி – தலஹிடிமுல்ல பகுதியில் உள்ள வீட்டுக்கு விசாரணைக்காக சென்ற பொலிஸ் ஜீப் மீது அடையாளம் தெரியாத நபர்கள் கல்லால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மார்ச் 23 அன்று இரவு 9 மணியளவில் இந்த தாக்குதல் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் ஜீப் கதவு மற்றும் ஜன்னல்கள் சேதமடைந்துள்ளன. மேலும் இதில் ஒரு பொலிஸ் அதிகாரியும் காயமடைந்துள்ளார் எனக் குளியாபிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி வசந்த குளியாபிட்டி அடிப்படை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பான சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று குளியாபிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழில் கொரோனாத் தொற்று அதிகரிப்பு பாடசாலை காலைப் பிரார்த்தனைக்கு தடை!

வடக்கு மாகாணத்தில் கொவிட் – 19 தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில், மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் முக்கிய அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதன்படி, கொவிட் – 19 தொற்று அதிகரித்து வருவதன் காரணமாக பாடசாலைகளில் காலை நேர பிரார்த்தனைகளுக்காக மாணவர்களை ஒருங்கிணைத்து நடத்துவதை தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி எதிர்வரும் 31.05.2021 வரை வகுப்பறைகளிலேயே காலை நேர பிரார்த்தனைகளை தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.கவினரும் ஐக்கிய மக்கள் சக்தியினருமே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குற்றவாளிகள்!

### என்கிறார் வாசுதேவ



ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினருமே உயிர்த்த ஞாயிறுதினதாக்குதல் குற்றவாளிகள். அவர்கள் இரு தரப்பையும் சிறையில் அடைக்க வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கழமை ஏப்ரல் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் பின்னால் அரசியல் பின்புலமொன்று உள்ளது. அரசியல் நோக்கமொன்று உள்ளது. தாக்குதல்களை நடத்தியவர் யார்? அவர்களின் பின்புலத்தில் யார் யார் இருந்தனர் என்பதை மாத்திரம் ஆய்வுக்கு உட்படுத்துவது போதுமானதல்ல.

சஹ்ரான் இஸ்லாமிய அடிப்படைவாத வன்முறைக் கருத்துக்களை உருவாக்கியமை உண்மைதான். சர்வதேச தெற்கு நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கையில் இஸ்லாமிய இராஜ்ஜியமொன்று உருவாக்குவது அவருடைய நோக்கமாக இருந்தது. அது நீண்டகால வேலைத் திட்டமாகும்.

அவ்வாறு நீண்ட வேலைத்திட்டமாக அது இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பாதியில் அவர் குண்டுத்தாக்குதல்களை நடத்தி உயிரிழந்தமை ஏன்? அதற்கான பதிலை நாம் கண்டறிய வேண்டும். அவ்வாறு இல்லாமல் இதன் ஆரம்பத்தைத் தேடிக்கொள்ள முடியாது.

சர்வதேச சதித்திட்டம் இதன் பின்புலத்தில் உள்ளதாக கர்த்தினால் கூறியுள்ளார். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் அவ்வாறு எதுவும் இல்லை.

இந்தச் செயற்பாடுகள் ஆரம்பமான காலத்தில் ரணில் விக்கிரமசிங்கதான் பொலிஸுக்கு பொறுப்பாக இருந்தார். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் அவரது பெயர் இல்லை. அதுதொடர்பில் கவலையடைகிறேன். பொலிஸ் செயற்பாடுகள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அத்தருணத்தில் நாம் குற்றச்சாட்டுகளையும் சுமத்தியிருந்தோம்.

கடந்த அரசாங்க காலத்தில் மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டனர். ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போடும் தேவையே அவர்களுக்கு இருந்தது.

இல்லாவிட்டால் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாத ஒரு சூழலை உருவாக்குவது அவர்களது எண்ணமாகும். நாட்டில் பாரிய கலவரமொன்றை ஏற்படுத்தி எம்.சி.சி. உடன்படிக்கையை கைச்சாத்திட்டு ஏகதிபத்தியத்தை உருவாக்க முற்பட்டனர். அதனால்தான் சஹ்ரான் ஊடாக குண்டுத்தாக்குல்களை நடத்தினர்.

சஹ்ரான் நீண்டகாலத் திட்டத்தில் இஸ்லாமிய இராச்சியமொன்றை உருவாக்கும் நோக்கத்தில் செயற்பட்டிருந்தார். ஆனால், அத்தருணத்தில் அவருக்கு பின்புலமாகவிருந்த சர்வதேச சக்திகள் குண்டுத்தாக்குதல்களை நடத்துமாறு கட்டளையிட்டமையால்தான் அவர் தாக்குதல்களை நடத்தினார்.

உலகில் தமக்கு அடிபணியாத நாடுகளையும் சீரழிப்பதன் பின்புலத்தில் அமெரிக்கதான் உள்ளது. எம்.சி.சி. உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் பின்புலத்தை உருவாக்க எமது நாட்டில் பாரிய கலவரமொன்றை உருவாக்கி தமது பலத்தை நிறுவுவதற்கே சஹ்ரானின் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

அதன்மூலம் ஜனநாயகமாக நடக்கவிருந்த ஜனாதிபதித் தேர்தலை நிறுத்த முயற்சித்தனர். அன்று இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் இன்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தியினருமே இந்தத் தாக்குதல்களின் குற்றவாளிகள். அவர்கள் இரு தரப்பையும் சிறையில் அடைக்க வேண்டும். – என்றார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நல்லாட்சி அரசே காரணமாகும்!

### என்கிறார் பிள்ளையான்



“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் நல்ல பல தீர்வுகளும், காரியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதனை ஒரு பொதுப் பிரச்சினையாக மாத்திரம் பார்த்து பேசிக் கொண்டிருக்கின்றனர்” என நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ‘இந்த சம்பவம் இடம்பெற்றமைக்கு நல்லாட்சி அரசுதான் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள இங்குள்ள பலரும் மறுக்கின்றனர்.’ எனக் கூறியுள்ளார்.

## சுற்றாடல் பாதிப்புத் தொடர்பாக இரு வாரத்தில் உண்மை வரும்!

சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்கள் தொடர்பில் தற்போது நாடகங்களே அரங்கேற்றப்படுகின்றன. இவை தொடர்பான உண்மைத் தகவல்கள் இரு வாரங்களுக்குள் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்கள் இடம்பெறவில்லை என்று நாம் கூறவில்லை. எனினும் இது தொடர்பில் குறிப்பிட்ட சிலரால் புனையப்பட்ட நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

விகாராமஹாதேவி பூங்கா வளாகத்தில் பாரிய சித்திரம் காட்சிப்படுத்தப்பட்டு பின்னர் நீக்கப்பட்டதன் பின்னணி இதுவேயாகும்.

இதனைக் காட்சிப்படுத்த மாநகரசபையே அனுமதியளித்துள்ளது. பின்னர் மாநகரசபையால் அது இரத்து செய்யப்பட்டுள்ளது. இதில் அரசாங்கத்தின் தலையீடு கிடையாது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பிலும், சுற்றாடல் பாதிப்பு தொடர்பிலும் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளின் உண்மை தன்மை இரு வாரங்களுக்குள் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும். – என்றார்.

## அரசின் தற்போதைய இலக்கு முஸ்லிம்களே!

### கஜேந்திரகுமார் தெரிவிப்பு



இலங்கையில் போரின் போது அரசாங்கத்தை ஆதரித்த முஸ்லிம்கள் தற்போது அரசாங்கத்தின் இலக்குகளாக மாறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது முஸ்லிம் அரசியல் தலைமை அரசாங்கத்தை ஆதரித்ததாக அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் ஓரங்கட்டப்படுவதை அறிந்தபோது சக தமிழ் பேசும் சகோதரர்கள் அரசாங்கத்தின் பக்கத்தை தேர்ந்தெடுத்ததால் தமிழ் மக்கள் கோபமடைந்தனர், வருத்தப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உளவுத்துறையுடன் முஸ்லிம் சமூகமும் செயற்பட்டு வந்ததாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், யுத்தம் முடிவடைந்ததிலிருந்து முஸ்லிம் சமூகம் அரசாங்கத்தின் ஓர் இலக்காக மாறியுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 8 லட்சத்து 44 ஆயிரத்து 327 பேர் கொரோனா தடுப்பூசி பெற்றுள்ளனர்!

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 8 லட்சத்து 44 ஆயிரத்து 327 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாத்திரம் ஐந்தாயிரத்து 972 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தியாவிடம் இருந்து நன்கொடையாக 5 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றமையையடுத்து ஜனவரி 29ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நிகழ்வு பிற்போடல்

நல்லூர் றோட்டறிக் கழகத்தினால் நடத்தப்பட்ட அதிஷ்டலாப சீட்டிழுப்பு செயற்திட்டத்தின் அதிஷ்டம் பார்க்கும் நிகழ்வானது இம்மாதம் 28 ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை மண்டபத்தில் இடம்பெறவிருந்தது எனினும் தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இவ் நிகழ்வானது எதிர்வரும் 11.04.2021 அன்று அதே இட நேரத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேடிச் சம்பாதித்த வினை

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஏற்பட்ட பின்னடைவு கொழும்பைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியிருப்பது தெளிவு.

ஜெனிவாவில் நடைபெற்றது இலங்கைக்குப் பின்னடைவா, பாதிப்பா என்பவற்றுக்கு அப்பால் அது பெரும் இராஜதந்திரத் தோல்வி என்பது கண்கூடு.

சரியோ, பிழையோ – இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, ஜெனிவாத் தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு, வழமைக்கு மாறாக, இம்முறை இலங்கையிடமிருந்து சர்வதேசத்திடம் வந்து விட்டது என்பது உண்மை.

இதுவரை காலமும், தீர்மானத்தின் இணை அனுசரணையாளர்களில் ஒருவராகக் கொழும்பு இருந்ததாலும், தீர்மானம் இலங்கை பற்றியதானதாலும், அதில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு – பொறுப்பு – இலங்கையிடம் என்று ஒப்புவித்து விட்டு சர்வதேச சமூகம் பார்த்திருந்தது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அடுத்த தடவை – பெரும்பாலும் இரண்டு வருடங்களின் பின்னர் – பரிசீலனைக்கு எடுக்கப்படும் போதுதான் அதில் தலையிடவோ, கருத்துக் கூறவோ சர்வதேச சமூகம் எத்தனிக்கும். அப்போதும் இலங்கை ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லி, தானும் சேர்ந்து பிறிதொரு தீர்மானத்தை நிறைவேற்றி, இன்னொரு கால அவகாச வாய்ப்பைப் பெற்றுக் கொண்டு வந்து விடும்.

2015 முதல் 2021 வரை ஐந்து, ஆறு ஆண்டுகள் இப்படித்தான் விடயத்தை ஒட்டித் தப்பிப் பிழைத்தது இலங்கை.

ஆனால், புதிதாக அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய அரசு, தான் இலங்கையில் உள்ளூர் அரசியலில் பின்பற்றிய பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்குக் கொள்கையை – சித்தாந்தத்தை – சர்வதேசத்தைக் கையாளும் இராஜதந்திரத்திலும் நேரடியாகப் பிரயோகித்தது.

இலங்கை தொடர்பான தீர்மானங்களின் இணை அனுசரணைப் பொறுப்பிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது.

ஆனால், இலங்கை தொடர்பான விடயத்தில் தன்னுடைய பாட்டில் – இலங்கையின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் – தீர்மானத்தை நிறைவேற்றியது சர்வதேசம். அதனால் அந்தத் தீர்மான வாசகத்தை நிறைவேற்றச் செய்யும் பொறுப்பு அதை ஆதரித்து வாக்களித்த நாடுகளின் கைகளில் வீழ்ந்துவிட்டது.

அதாவது, இலங்கை தான், தனது களத்தில் வைத்து ஆறுதலாக விளையாடி, நகர்த்தக் கூடியதாக அந்தப் பந்து இதுவரை காலமும் இலங்கையின் களத்தில் இருந்தது. வெறுமனே கிடந்தது. இப் போது தேவையில்லாமல் அதை சர்வதேசத்திடம் விளையாட விட்டிருக்கின்றது இலங்கை – அந்தத் தீர்மானத்தை எதிர்த்ததன் மூலம்.

இப்படி நெருக்கடியான இராஜதந்திர முடிவு வரும் என்று நேரத்துடன் ஊகிக்காத கொழும்பு அரசு ‘சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி’ இந்தப் பிரேரணையை எதிர்க்கப்போய் சிக்கலை வாங்கிக் கட்டியிருக்கின்றது.

தீர்மான வாசகங்களை நடைமுறைப்படுத்த வேண் டிய கடப்பாடு – பொறுப்பு – சர்வதேசத்திடம் விழுந்து விட்டதால் இனி அது தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கும்.

வெறுமனே யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் படையினர், அதிகாரிகள், கட்டளைப் பீட ஒழுங்கில் பொறுப்பேற்க வேண்டியவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எதிராக வெளிநாடுகளில் பயணத் தடை, சொத்து முடக்கம் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகள் இனி ஆரம்பமாகும்.

அத்துடன் இது முடிந்து விடாது. அக்காலகட்டத்தில் இடம்பெற்ற மேற்படி சம்பவங்கள் தொடர்பில் சாட்சியங்களைப் பதிந்து, ஆவணங்கள், ஆதாரங்களைத் திரட்டிச் சேமிக்கும் பொறிமுறையும் முக்கிய பங்களிக்கின்றது.

ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட ‘குற்றச் சந்தேக நபர்களுக்கு’ எதிராக நடவடிக்கைகள் அறிவிக்கப்படும் போது, அவர்களுடன் தொடர்புபட்டவர்கள், அவர்களுடன் சேர்ந்து இயங்கியவர்கள், சக அதிகாரிகள், கீழ் நிலையிலோ, மேல் நிலையிலோ பணியாற்றியோர் போன்றோர் தங்களுக்கு எதிராகவும் அத்தகைய அறிவிப்புகள் வெளியாகலாம் என அஞ்சி, அவற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்காகத் தாங்களாகவே முன்வந்து, மேற்படி பொறிமுறையைத் தேடி, நாடி வந்து ஒப்புதல் வாக்குமூலமளிப்பார்கள், சாட்சியமளிப்பார்கள்’ ஆவணங்கள், சான்றாதாரங்களை வழங்குவார்கள் என்றெல்லாம் கூறப்படுகின்றது. அவற்றையெல்லாம் சேகரித்து, இலங்கைக்கு எதிராக ஒரு முழு அளவிலான குற்றப்பத்திரத்தைத் தயாரிக்கும் வாய்ப்புச் சர்வதேசத்துக்குக் கிடைத்திருக்கின்றது.

தேவையில்லாமல் – இராஜதந்திரக் கொழுப்பில் – சிங்கள, பௌத்த பேரினவாதத் தடிப்பில் – ஐ.நா. தீர்மானத்தை எதிர்க்கப்போய் – வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டுவது போல – இராஜதந்திர நெருக்குவாரங்களை விலை கொடுத்து வாங்கிக் கட்டியுள்ளது கொழும்பு. அவ்வளவுதான்.

## நீர் வழங்கல் அதிகாரசபை ஊழியர்களின் கொடுப்பனவை அதிகரிக்க ஆலோசனை!

### முன்வைத்தார் அமைச்சர் வாசுதேவ



தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் அனைத்து ஊழியர்களின் மாதக் கொடுப்பனவை 25 சதவீதத்தால் அதிகரிக்குமாறு நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் முகாமைத்துவப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதிகார சபையின் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உதவியாளர்கள், சிற்றூழியர்கள் என அனைத்து தரப்பினரும் இந்தத் தீர்மானத்தில் உள்வாங்கப்படுவார்கள்.

நீர்வழங்கல் அதிகார சபையின் தொழிற்சங்கத்தினருடன் இடம்பெற்ற பேச்சுகளைத் தொடர்ந்து அமைச்சர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு எதிர்த் தரப்பினர் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான முறையான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டால் மாத்திரமே 2025 ஆம் ஆண்டு அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் வெற்றி பெறும். இதற்கு அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்பும் அவசியம். சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது.

நீர்வழங்கல் அதிகார சபையின் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உரிய தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைப் பத்திரம் ஊடாக சாதகமான தீர்வு வெகுவிரைவில் கிடைக்கப் பெறும் என அமைச்சர் தொழிற்சங்கத்தினரிடம் குறிப்பிட்டார்.

## கஞ்சாவுடன் கைதாகியுள்ள சிறை அதிகாரி பணி நிறுத்தம்!

வெலிக்கடை சிறைச்சாலையில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட அதிகாரி பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கைதிகள் இருவரின் பாதுகாப்பிற்காக வெலிக்கடை சிறைச்சாலையில் பணிபுரிந்து வரும் அதிகாரியொருவர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

அந்த அதிகாரியிடம் கஞ்சா போதைப் பொருள் இருப்பதாக சிறைச்சாலைகள் திணைக்கள குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அவரிடமிருந்து 1,510 மில்லி கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி அதிகாரி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவரைப் பணியிடை நிறுத்த சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்ததாகவும் சிறைச்சாலை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## கசிப்பு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை!



400 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும் மீட்டனர்.

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை கடந்த வியாழக்கிழமை பொலிஸார் முற்றுகையிட்டு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரைக் கைது செய்தமையுடன் 400 லீற்றர் கோடாவை மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவதினமான வியாழக்கிழமை மாலை குறித்த பிரதேசத்திலுள்ள காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து வரும்நிலையத்தை பொலிஸார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கதிரவெளி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்தமையுடன்

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பசறை விபத்தில் தாய், தந்தையை இழந்த மூன்று குழந்தைகளுக்கு வைத்தியர் உதவி!



பசறை விபத்தில் தாய் தந்தையை இழந்து அநாதைகளான மூன்று குழந்தைகளுக்கும் உதவுவதற்கு வைத்தியர் ஒருவர் முன்வந்துள்ளார்.

பதுளை - பசறையில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்திருந்தனர்.

இதில் மூன்று குழந்தைகள் தமது தாய் தந்தையை இழந்து லுனுகலையில் பாட்டியுடன் வாழ்கின்றமை அனைத்து ஊடகங்களினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

இதையடுத்து குறித்த குழந்தைகளுக்கு உதவ அம்பாறை பிராந்திய தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் வஜிர ராஜபக்ஷ முன்வந்துள்ளார்.

மூன்று குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள விரும்புகிறேன் என்று கூறி அவர்களைத் தத்தெடுக்க பசறை பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, வைத்தியர் வஜிர ராஜபக்ஷவின் கோரிக்கை தொடர்பாகப் பசறை பொலிஸார் நீதிமன்றத்திற்கு தகவல் அளித்துள்ளனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.சவில் 5 வருட அனுபவமுடையோருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை!

## திலும் அமுனுகம கூறுகின்றார்



இலங்கை போக்குவரத்துச் சபையில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடும் 5 வருடத்துக்கு மேற்பட்ட தொழிற்துறை அனுபவமுடைய சேவையாளர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாரதி ஆலோசனை பதவிக்கான ஆட்சேர்ப்பு பரீட்சையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற போக்குவரத்து துறை நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சின் ஆலோசனை செயற்குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடுபூராகவும் உள்ள உப டிப்போக்களை பஸ் தரிப்பிடமாக மாத்திரம் பயன்படுத்தவும் அது தொடர்பான நிர்வாக நடவடிக்கைகள் பிரதான டிப்போ மூலம் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதன் ஊடாக நாடுபூராகவும் முறையானதும் சிறந்த சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகர போக்குவரத்தைக் கையாள்வது தொடர்பான முடிவுகளை எடுக்க மாகாண போக்குவரத்து குழு கூட்டங்களில் போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதியைக் கலந்துக்கொள்ளச் செய்வதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நகர போக்குவரத்தைக் கையாள்வது தொடர்பாக முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது போக்குவரத்து அமைச்சை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்கும் போது சில மோசடிகளைத் தடுக்க முடியும் .

அரச போக்குவரத்து சேவையில் சாரதி மற்றும் நடத்துநரின் வெற்றிடத்துக்காக குறைந்த வருமானம் பெறுபவர்களைத் தெரிவு செய்து தகுதியானவர்களை விரைவில் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய வாகனங்களில் காணப்படும் அதிநவீன தொழில்நுட்பம் தொடர்பாக சாரதிகளைத் தெளிவு படுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஆலோசனை செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பாக சாரதிகளுக்கு போதிய தெளிவின்மை காரணமாக நவீன வாகனங்களின் தன்மை விரைவில் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இணையவழி ஊடாக ரயில் பயண அனுமதிச் சீட்டுகளை பதிவு செய்யும் போது ஏற்படும் அசௌகரியம் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் பணித்துள்ளார்.

மேலும் நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைக் குறைத்துக்கொள்வதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைக்குமாறு நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்று உருவாக்குவதின் தேவை தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. பயணிகள் போக்குவரத்து பஸ் சாரதிகளுக்காக விசேட சாரதி அனுமதிப்பத்திரத்தை வெளியிடுவது பற்றியும் அமைச்சர் இதன்போது கலந்துரையாடியுள்ளார்.

# பெற்றோல் பவுஸர் குடைசாய்ந்தது!



திருகோணமலை – ஹபரண வீதியில் எரிபொருள் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று குடை சாய்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை – ஹபரண வீதியில், ஹபரண – ஹதரஸ் கொட்டுவ பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை பெற்றோல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பாரவூர்தியில் 19 ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், பாரவூர்தி குடைச் சாய்ந்ததால் அதில் ஏற்றிச் செல்லப்பட்ட எரிபொருள் கசியத் தொடங்கியதன் பின்னர் அப்பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த எரிபொருள் தாங்கியில் இருந்து கசிந்த பெற்றோலை எடுப்பதற்கு வரிசையில் மக்கள் நின்றமை அவதானிக்க முடிந்தது.

விபத்தில் பாரவூர்தியின் சாரதிக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மஹிந்தவின் செயற்பாடுகளே இந்த நிலைமைக்குக் காரணம்!

## வஜிர அபேவர்தன காட்டம்



2009 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகவிருந்த மஹிந்தராஜபக்ஷமற்றும் அவரது அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபை செயலாளருடன் உடன்படிக்கை செய்யாமல் இருந்திருந்தால், நாம் இன்று இந்த நிலைமைக்கு முகங் கொடுக்காமல் இருந்திருக்க முடியும்.

எமது நாட்டு மக்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிற்கச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையில் 14 வாக்குகள் மாத்திரமே இலங்கை சார்பாகக் கிடைத்தன.

அயல் நாடுகளான இந்தியா, நேபாளம் போன்றவற்றின் ஆதரவைக்கூட இந்த அரசாங்கத்தால் பெற முடியாமல் போயுள்ளது. அயல் நாடுகளுடன் சிறந்த வகையில் உறவுகளைப் பேண வேண்டும்.

2009 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபை செயலாளருடன் உடன்படிக்கை செய்திருந்தது.

அந்த ஒப்பந்தம் செய்யாமல் இருந்திருந்தால், நாம் இன்று இந்த நிலைமைக்கு முகங்கொடுக்காமல் இருந்திருக்க முடியும். எமது நாட்டு மக்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிற்கச்செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

இந்த உடன்படிக்கையின் மூலமாக எங்களின் பொறுப்புகளை உள்ளகப் பொறிமுறையொன்றின் மூலமாக செயற்படுத்துவோம் என 2015 இல் ஆட்சி அமைத்தபோது நாம் உறுதியளித்தோம்.

சர்வதேச சமூகத்துடனான உறவுகள் மூலமாக, ஐக்கிய நாடுகள் சபையால் 2015 இல் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதாக நாம் உறுதியளித்தோம்.

ஐ.நா. மனித உரிமை பேரவையும் அதற்கான தமது பூரண ஆதரவை எமக்கு வழங்கியிருந்தனர்.

எமது நாட்டில் காணப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்பின் ஊடாக உள்ளக பொறிமுறையை செயற்படுத்தியிருந்தோம். இதற்கு சர்வதேசத்தின் எந்தவொரு தலையீடும் இருக்கவில்லை. ஆனால் தற்போது அவ்வாறில்லை.

எமது நாட்டை மற்ற நாடுகளுக்கு வாடகைக்குக் கொடுக்காது, எம்மை நாமே ஆட்சி புரியும் அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின்போது இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை 2017 ஆம் ஆண்டு எமது ஆட்சிக் காலத்திலேயே நீக்கப்பட்டது.

இதன்பயனாக 2023 ஆம் ஆண்டு வரை ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை எமக்கு கிடைக்கச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான காரணமாகும். – என்றார்.

# அரிசி விலைகளில் திடீர் மாற்றங்கள்!

*அரிசி விலைகளில் திடீர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.*

*அதன்படி நாடு அரிசி ஒரு கிலோ 97 ரூபாவுக்கும், வெள்ளை மற்றும் சிவப்பு அரிசி ஒரு கிலோ 95 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.*

*எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து குறித்த விலை அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், ச.தொ.ச. மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மற்றும் சுப்பர் மார்க்கெட்டுக்களில் மேற்படி விலைகளில் அரிசியை கொள்வனவு செய்யமுடியுமென விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.*

# வீதியில் சென்ற பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு!

முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப் பெருமாள் குளம் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளம் அம்பலப் பெருமாள் குளம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வயோதிப தம்பதியினரைப் பின் தொடர்ந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அம்பலப் பெருமாள்குளம் காட்டுப்பகுதியில் வைத்து சங்கிலி அறுத்துச்செல்லப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொழும்பிலிருந்து காத்தான்குடிக்கு ஹெரோயின் கடத்தியவர் கைதானார்!

கொழும்பில் இருந்து காத்தான்குடிக்கு இலங்கை போக்குவரத்து பஸ்ஸில் ஹெரோயின் போதைப் பொருள் கடத்திய பயணி ஒருவரை மட்டக்களப்பு நாவலடி பிரதேசத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்ததுடன், அவரிடமிருந்து 5 கிராம் 20 மில்லிக்கிராம் போதைப்பொருளை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான வியாழன் மாலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி பிரதேசத்தில் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவத்து பஸ்ஸை பொலிஸார் தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது அதில் 5 கிராம் 20 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கடத்திச் சென்ற புதிய காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றமையுடன் அவரை வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத, மதவாத, இன நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடுகளே ஜெனிவா தோல்விக்கு காரணம் – சஜித்

ஜெனிவா பிரேரணையில் எமக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் இம்முறை ஆதரவளிக்காமல் இருந்தமைக்கு, அரசாங்கத்தின் மோசமான வெளிநாட்டு கொள்கையே காரணமாகும். மனித உரிமை மீறல் தொடர்பாக எல்.எல்.ஆர்.சி. யின் பரிந்துரைகளை நிறைவேற்றி இருந்தால் ஜெனிவாவில் இந்த நிலைமை எமக்கு ஏற்பட்டிருக்காது.

அத்துடன் 13ஆம் திருத்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மாகாண சபை முறை அவ்வாறே நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக் கிழமை ஏப்ரல் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவில் எமது நாட்டுக்கு எதிரான பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஜெனிவாவில் இந்த நிலை ஏற்படுவதற்கு அரசாங்கமே காரணமாகும். ஆணைக்குழுவின் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டிருக்கும் 16 பக்கம் கொண்ட அறிக்கையில் வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக சுமார் 3 பக்கங்களிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

80 வீதம் எமது நாட்டில் இடம்பெறும் ஊடக சுதந்திரம், பேச்சு சுதந்திரம், அரச நிறுவனங்கள் அரசியலாக்கப்பட்டமை, மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் கடந்த காலங்களில் ஜெனிவாவில் எமக்கு ஆதரவளித்த பல நாடுகள் இம்முறை எதிராக அல்லது வாக்களிப்பதை தவிர்த்து கொண்டிருக்கின்றன.

இதற்குக் காரணம் அரசாங்கத்தின் மோசமான வெளிநாட்டுக்கொள்கையாகும். அதேபோன்று அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நாட்டுக்குள் இடம்பெற்று வந்த இனவாத, மதவாத, இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும் விடயங்கள் இடம்பெற்றமையே ஜெனிவாவில் தோல்வியடையக் காரணமாகும்.

அத்துடன் அரசாங்கத்தின் இயலாமையை எதிர்க்கட்சி மீது சுமத்தி அரசாங்கம் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றது.



எமது வெளிவிவகார அமைச்சர் நாட்டுக்குள் சிங்கள பௌத்த நாடு, 13 ஆம் திருத்தத்தை இல்லாமலாக்குவோம். மாகாணசபையை இல்லாமலாக்குவோம் என பிரசாரம் செய்கின்றார்.

ஆனால் வெளிநாடுகளுக்கு சென்று பல்லின நாடு, 13 பிளஸ், மாகாணசபை முறைமையை மேற்கொள்வோம் எனத் தெரிவிக்கின்றார். இவ்வாறான இரட்டை வேட வேசமே எமது நாட்டின் நம்பிக்கை சர்வதேசத்திடம் இல்லாமலாக்கியது.

மேலும் யுத்தத்துக்கு பின்னர் எமது உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேச மயமாக்கியது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆவர். பான்கீமூனுடன் மேற்கொண்ட இருதரப்பு ஒப்பந்தத்தில், எமது நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உறுதியளித்து, எல்.எல்.ஆர்.சி. ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

ஆனால் அதன் பரிந்துரைகளைச் செயற்படுத்த அரசாங்கம் தவறியது. அதனால்தான் சர்வதேசம் எமது விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தது. அரசாங்கத்தின் பல வீனங்கள் காரணமாகவே வெளிநாட்டு தலையீடுகள் வருகின்றன.

அதனால் எமது பிரச்சினைகளை நாங்கள் தீர்த்துக்கொள்ளவேண்டும். சர்வதேச தலையீடுகள் எமக்குத் தேவையில்லை. அந்த நிலைப்பாட்டிலேயே நாங்களும் இருக்கின்றோம். ஆனாலும் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாங்கள் அமைக்கும் பொறிமுறை சர்வதேச நாடுகளின் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும். அத்துடன் அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபை முறை அவ்வாறே செயற்படுத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். – என்றார்.

## ரஷ்ய தடுப்பூசிகள் முதலில் மத்திய மாகாணத்துக்கே!

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய 70 லட்சம் தடுப்பூசிகளை முதற்கட்டமாக கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்யும் தடுப்பூசிகளை மத்திய மாகாணத்திலுள்ளவர்களுக்கு முதற்கட்டமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் பரவல் அச்சுறுத்தல் மேல் மாகாணத்திலேயே அதிகமாகக் காணப்பட்டது. எனவே தான் இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிகளை மேல் மாகாணத்திலுள்ளவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொள்ளவுள்ள தடுப்பூசிகளை மாகாணங்கள் அடிப்படையில் வழங்க எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய ஸ்புட்னிக் தடுப்பூசிகளை மத்திய மாகாணத்துக்கு முதற்கட்டமாக வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

கொவிட் – 19 வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக இலங்கையின் சனத்தொகையில் ஒரு கோடியே 40 லட்சம் மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதன் ஆரம்பகட்டமாக 50 லட்சம் மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு சுகாதார அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் தடுப்பூசியை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுவின் பரிந்துரைக்கமைய 70 லட்சம் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை 69 லட்சத்து 65 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. – என்றார்.

## முறையற்ற வெளிநாட்டுக் கொள்கையே ஐ.நாவில் பிரேரணை நிறைவேற காரணம்!

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



அரசாங்கத்தின் முறையற்ற வெளிநாட்டுக் கொள்கையே ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக முன் வைக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கான காரணமாகும்.

முறையான இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்திருந்தால் பிரேரணையை தோல்வியடையச் செய்திருக்க முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இவ்வாறு பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என்பதோடு , பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் தொடர்பில் காணப்படும் பயணத்தடை மேலும் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## சாய்ந்தமருது நகர சபையை உருவாக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

### ஏ.எல்.எம். அதா உல்லா கோரிக்கை

பல சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகள் அதிலும் குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள் சாய்ந்தமருது மக்களுக்கு அதை தருவதாகவும் இதைதருவதாகவும் கூறி ஏமாற்றினர். தேர்தல் காலத்தில் அந்த பிரதேசத்திற்கு சென்ற ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தேர்தலின் பின்னர் அந்த மக்களுக்கு நகரசபை தருவதாக கூறினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அங்கு வருகைதந்திருந்த போது அந்த மக்கள் தமது நகரசபையை கோரினர். அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நான்கு சபைகளாக இருக்கும் என கூறினார். முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் தேர்தலுக்கு பின்னர் தருவதாக வாக்குறுதியளித்தார் எனத் தேசிய காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு பேசிய அவர்,

சாய்ந்தமருதுக்கு தனி நகரசபையை ஸ்தாபிக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதன் போது அரசியல் ஆதாயம் தேடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் செயற்பட்டனர். சாய்ந்தமருதில் திருமணம் செய்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. ஒருவரும் இவ்விடயத்தில் முனைப்பு காட்டினார். சாய்ந்தமருது நகரசபையை அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியானதாக மாற்றுவதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகிறேன் என்றார்.

## தீவிரவாதத்தை ஊக்குவிக்க முயன்றமை: குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைதாகினர்!

தீவிரவாதத்தை ஊக்குவிக்க முயன்ற குற்றச்சாட்டில் மேலும் இரு சந்தேக நபர்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

அதன்படி மாத்தளை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தீவிரவாதத்தைப் பரப்பியதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து டிசெம்பர் 5 ஆம் திகதி இவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

தீவிரவாதத்தை ஊக்குவிப்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள இலங்கையர்களிடமிருந்து நிதி சேகரித்தார் எனவும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற வலையமைப்புகளினூடாகத் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்க இலங்கைக்கு நிதி அனுப்பினார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை சமூக ஊடகங்களில் பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை பரப்பிய குற்றச்சாட்டுக்காக காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவரும் வியாழன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமின் நெருங்கிய கொள்கைகளைப் பின்பற்றுபவராக சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக இருவரையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் டி.ஐ.டி. தடுத்து வைத்துள்ளது.

## இராணுவச் சிப்பாய் தாக்குதல் ஒருவர் வைத்தியசாலையில்!

பெந்தோட்டை விடுதியில் இராணுவச் சிப்பாய் தாக்கியதில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குவைத் நாட்டிலிருந்து நாடு திரும்பிய சம்பத் எதிரிசிங்க என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

குருநாகல் – வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் குறித்த விடுதியில் இருந்த நிலையில் – குவைத் நாட்டிலிருந்து நாடு திரும்பிய நபர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில் காயமடைந்த தனிமைப்படுத்தலில் இருந்தவர், களுத்துறை – நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**




# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** தமிழ்நாட்டின் தற்போதைய ஆளுங் கட்சியான அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றியும் தனிஈழம் அமைப்பது பற்றியும் சொல்லியிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** பார்க்காமல் என்ன? அ.தி.மு.க. வெறுமனே சுழலும் பம்பரம்தான். தேர்தலில் அதனோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் பாரதிய ஜனதாக்கட்சிதான் அதனைச் சுழற்றிவித்துக் கொண்டிருப்பதாய், அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். எனவே மேற்கருத்தை இந்திய அரசின் கருத்தாகவே கொள்ளவேண்டும். இதனை நம் ஆட்சியாளர்கள் விளங்கியிருப்பார்கள். அதனால் இந்திய அரசை, சமாதானம் செய்யும் முயற்சிகள் திரைக்குப்பின்னால் தொடங்கியிருக்கும் என்று நினைக்கிறேன். அம்முயற்சிகள் வென்றனவா? இல்லையா? என்பதை ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இந்தியா எடுக்கப்போகும் நிலைப்பாட்டில் இருந்து தெரிந்து கொள்ளலாம். நீங்கள் இதனைப் படித்துக் கொண்டிருக்கும் போது அந்நிலைப்பாடு தெரியவந்திருக்கும். எது எப்படியோ? தேவையேற்பட்டால் தமிழ் நாட்டின் உணர்வைக் காரணம் காட்டி மீண்டும் நம் நாட்டினுள் நுழையும் சுருக்குக் கயிற்றை இந்தியா இன்னும் தன் கைவசம் வைத்திருக்கிறது என்பதை நம் ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவின் சுருக்குக் கயிற்றில் நம்மவர்கள் மீண்டும் சிக்கப்போகிறார்களா? இல்லையா? என்பதை விரைவில் காலம் நமக்கு உணர்த்தும்.



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'இடையன்ட கையில கயிறு கிடப்பது தெரியாமல் தன் இஷ்டத்துக்குத் துள்ளின ஆட்டிட கதைதான்' போல..**

**2. கேள்வி:-** பதினைந்து பேரின் உயிரைப் பலி கொண்ட பசறை பஸ் விபத்துக் காட்சியைப் பார்த்தீர்களா? அந்த விபத்திற்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:-** பார்க்காமல் என்ன? CCTV கமராக்களின் உபகரிப்பால் இத்தகைய அநியாயக்காட்சிகள் பலவற்றைப் பார்க்கவேண்டியிருக்கிறது. பலபேர் அக்காட்சிகளை ரசித்து வேறு பார்க்கிறார்கள். மனித மனங்கள் வக்கிரப்பட்டுவிட்டன. முகப்புத்தகத்தைத் தட்டுகிறபொழுது தற்செயலாய் அக்காட்சியைப் பார்க்க வேண்டி வந்தது. எதிரில் வந்த வாகனத்தை வந்த வேகத்தோடு தாண்ட முனைந்து அந்த பஸ் பாதாளத்தில் கவிழ்ந்த காட்சியைப் பார்த்து பதறிப்போய் விட்டேன். எத்தகைய கொடுமை. அவ்விபத்திற்கு, பாதையில் விழுந்து கிடந்த பாறைதான் காரணம் என்றும், ஓட்டுனரின் அக்கறையீனம்தான் காரணம் என்றும் பலரும் பல காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கென்னவோ விதிதான் அவ்விபத்தின் காரணம் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அந்த பஸ்ஸைத் தவறவிட்ட தம்பதியர்கள் ஓட்டோ பிடித்து துரத்தி வந்து அதனுள் ஏறி விபத்தில் இறந்திருப்பார்களா? விதி வலியது!



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ஐயாவுக்கு அடுத்த பிரசங்கத்துக்கு வியம் கிடைச்சுப்போச்சு போல....**

**3. கேள்வி:-** ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை வென்றால் அல்லது தோற்றால் அதன் பாதிப்பு நம்நாட்டைப் பொறுத்த அளவில் எப்படி இருக்கப்போகிறது?

**பதில் :-** இரண்டாலும் நம் தேசத்திற்குத் தீமை விளையும் என்பதுதான் என் கருத்து. பிரேரணை வென்றுவிட்டால் உலகின் நெருக்கடிக்கு ஆளாகி நம் தேசம் பாதிப்புறப் போகிறது. தோற்றுவிட்டால் ஏற்கனவே நடுநிலையின்றி இனங்களுக்குள் பகை வளர்த்துக் கொண்டிருக்கும் இன்றைய அரசு இன் னும் துணிவு கொண்டு மேலும் பிழையான பாதையில் பயணித்து ஏதோ வகையில் இந்தத் தேசத்தின் அழிவுக்கு வித்திடப் போகிறது. இனப்பகை ஒழியும் மட்டும் இந்த நாடு உருப்படப் போவதில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ எப்பிடியும், துள்ளுற மாடு பொதி சுமக்கத்தான் போகுது என்கிறார் போல...**

**4. கேள்வி:-** உலகளாவிய கொரோனாவின் மூன்றாம் அலை தொடங்கிவிட்ட தாமே?

**பதில் :-** மூன்றாவதென்ன? நான்கு, ஐந்து, ஆறு என எத்தனையாவது அலையும் தொடங்கித் தொலையட்டும். போட்ட ஊசிக்குப் பயன் இருக்குமா? இல்லையா? 'பிளீஸ்' அதை யாராவது கேட்டுச் சொல்லுங்களேன்......



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** 'கிழவி **கஞ்சிக்கு அழ, குமரி கல்யாணத்துக்கு அழுதாளாம்.... ஹி.... ஹி....**

**5. கேள்வி:-** கச்சதீவை இந்தியா மீளப்பெறப்போவதாய் இந்திய அமைச்சர் ஒருவர் பேசியிருப்பது பற்றி?

**பதில்:-** 'நீ தடி எடுத்தால் நானும் தடி எடுப்பேன்' என்ற கதைதான். ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தை மீறப் போவதாய் இவர்கள் விடும் வாய்ச்சவடாலுக்கு, எதிர் வாய்ச்சவடாலாய் இந்திராவுடன் செய்த ஒப்பந்தத் தைத் தான் மீறப்போவதாய் இந்தியா சொல்லத் தொடங்கியிருக்கிறது. நினைத்துப் பார்த்தால் அதில் நியாயம் இருப்பதாய்த்தான் தெரிகிறது. வாக்குச் சுத்தம் எல்லோருக்கும் அவசியமேதானே.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'நீ சிரித்தால் நான் சிரிப்பேன் சிங்காரப் பெண்ணே**
**நீ அழுதால் நான் அழுதேன் மங்காத பொன்னே....'**

**6. கேள்வி:-** தமிழ்நாட்டுத் தேர்தலில் யார் வெல்லவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**பதில் :-** நம்மூதாதையர்கள் காலாகாலமாய்ப் போற்றி வளர்த்த அறத்தையும் பண்பாட்டையும் இறை நம்பிக்கையையும் மொழிப்பற்றையும் சத்தியத்தையும் இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் காக்க வல்லவர் எவரோ அவரே வெல்லவேண்டும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அடிக்கடி அங்க போறதால 'ஸ்ரெயிற்றா' பதில் சொல்ல ப..ய..ப்.. பி.. டுறார் போல**

**7. கேள்வி:-** புலிகளதும் மற்றைய போராளிகள் குழுக்களதும் மனிதஉரிமை மீறல்கள் பற்றியும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆராயவேண்டும் எனக்கேட்டு ஒரு குழுவினர் நல்லூரில் உண்ணா விரதம் இருப் பதைப்பற்றியும் அதனை யாழ் மாநகர சபை மேயர் தடுக்க முனைந்திருப்பது பற்றியும் என்ன நினைக் கிறீர்கள்?

**பதில்:-** சங்கடமான கேள்வி. ஆனாலும் நடுநிலைமையாய் பதில் சொல்ல வேண்டியது என் கடமையாகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் எல்லா உரிமையும் இருக்கத்தான் செய்கிறது. தத்தம் கருத்தை வெளியிடும் உரிமையை மறுப்பது ஜனநாயகம் ஆகாது. அதனை அரசு செய்தாலும் பிழைதான், நாம் செய்தாலும் பிழைதான். மாநகரசபைக்குச் சொந்தமான இடத்தில் அனுமதி பெறாமல் பந்தல் இட்டதையே மேயர் தவறென்று அறிவித்திருக்கிறார். அந்த அறிவிப்பில் கடும் 'தொனி' இருந்ததைக் கவனிக்க முடிந்தது. அதனைத் தவிர்த்திருக்கலாம். சில நாள்களின் முன் இதேபோல நடந்த வேறொரு உண்ணா விரதப் பந்தலை உதாரணம் காட்டி அதை அனுமதித்தது எப்படி என, இந்த உண்ணாவிரதக் காரர்கள் கேட்டதை ஊடகங்களில் காணமுடிந்தது. அக்கேள்வியிலும் நியாயம் இருப்பதாகவேபடுகிறது. முன்பு உண்ணா விரதம் இருந்தவர்கள் அனுமதி பெற்றார்கள் என்பதற்கான ஆதாரத்தைக் காட்டிவிட்டால் மேயர் பக்கத்து நியாயம் உறுதிப்பட்டுவிடும் என்று நினைக்கிறேன். போராளிக்குழுக்கள் மனித உரிமைகளை மீறியமை எவரும் மறுக்கமுடியாத உண்மையே. உலகம் சொல்லும் மனித உரிமைகள் முழுவதையும் கடைப்பிடிப்பதனால் ஆயுதப் போராட்டத்தை எவராலும் நடத்தமுடியாது என்பது அதைவிடப் பெரிய உண்மையாம். பாதிப்புற்றவர்கள் தமக்கான நியாயத்தைக் கோருவதைத் தவறென்று சொல்லமாட்டேன். ஆனால் இவ்வளவு காலமும் இப் பாதிப்புக்கள் பற்றி வெளிப்படப் பேசாத இவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் பற்றி பிரேரணை வந்திருக்கும்இந்நேரத்தில்உண்ணாவிரதம்இருப்பதுதான் எங்கோ இடிக்கிறது. உண்ணாவிரதிகள் இவ் உண்ணா விரதத்தைத் தாங்களாக நினைந்து செய்கிறார்களா? எவரதும் தூண்டுதல்களால் செய்கிறார்களா? எனும் கேள்வி மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இவர், தட்டிக் கொடுக்கிறாரா? தட்டிக் கேட்கிறாரா?**

**(11ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications from suitably qualified persons for the following posts:

1. **TECHNICAL OFFICER(AUDIO VISUAL) GRADE III**

**Qualifications**:

i) Should pass in three(3)subjects at the G.C.E(A/L)examination in any stream

**AND**

ii) a) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q level 5 in the field of Electronics and Telecommunication/ Electronics/Multimedia or Audio Visual Techniques from an institution recognized by Territory and Vocational Education Commission or a statutory institution which has been established by an act passed by the parliament.

**OR**

b) Having obtained technical qualifications in the field of Electronics and Telecommunication /Electronics/Multimedia or Audio Visual Techniques accepted as equivalent to the above qualification of (ii)(a) by Tertiary and Vocational Education Commission with one year experience in Audio Visual work in reputed organization.

Age limit : Should not be less than 18years and not more than 45years
Salary Scale : U-MT1 (III) - Rs.31,625–7X300; 10X355-37,275p.m
Selection : By written and/or practical test and an interview

2. **SUPERVISOR (CIVIL), GRADE III**

**Qualifications:**

i) National Certificate in Technology or equivalent qualifications with 3 years' experience may be obtained while following the NCT course;

**OR**

ii) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

Age limit : Should not be less than 18years and not more than 40years
Salary Scale : U-MT1 (III) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m.
Selection : By Interview

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on **specified form (for each post)** issued by the University. Application Form and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna** Collection Account Number: **970000090000387.** A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.

The envelope containing the duly filled application form must bear title of the post which you are applied for on its top left hand corner and send under registered post to reach us on or before **27.04.2021** to the following address.

**Deputy Registrar/ Non-Academic Establishments,**
**University of Jaffna,**
**P.O. Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.
Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR,
University of Jaffna.
26.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான கோரிக்கைகளினை நீக்கி இலங்கையைக் காப்பாற்றியது ஐ.நா.!

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் காட்டம்

கொழும்பு, மார்ச் 27

இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் போன்ற ஈழத் தமிழர் முன்வைத்த பிரதான கோரிக்கைகளை நீக்கம் செய்து இலங்கையைக் காப்பாற்றியது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை.

- இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான இந்தப் பிரேரணை, பிரித்தானியா தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டது கனடா, ஜேர்மனி, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் சார்பாகவே அந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில், பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்தன, எதிராக 11 நாடுகள் வாக்களித்தன, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட 14 நாடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்துக்கொண்டன.

உண்மையில் பொறுப்புக் கூறலை இலங்கை அரசிடமே கொடுக்கின்ற ஓர் வலுவற்ற தீர்மானமே இது. 13 ஆம் திருத்தச் சட்டமே தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வுக்கானஒரேவழியெனஇந்தியாபலஆண்டுகளாகக் கூறிவந்தது. பிரித்தானியா தலைமையில் உறுப்பு நாடுகளால் தயாரிக்கப்பட்ட தீர்மானத்துக்குள் இந்தியா புகுத்திவிட்டு பங்கேற்காமல் வெளிநடப்பு செய்திருக்கிறது.

13 ஆம் திருத்தச்சட்டம் என்பது ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்குரிய ஏற்பாடுகளுக்கான ஆரம்பப் புள்ளியாகக்கூட அமையாதென்பது தமிழர் தரப்பால் சுட்டிக்காட்டி வந்த போதும் தமது அரசியல் முகவர்களைப் பயன்படுத்தி கடந்த பல ஆண்டுகளாக இந்தியா வாய்ப் பேச்சாக கூறி வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

இன்றைய கால கட்டத்தில் பன்னாட்டு அரங்கில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக இது இருந்தாலும், முன்னைய தீர்மானங்களை விட வலுவற்று வெறுமனே நீர்த்துப்போன ஒரு தீர்மானமாக இது வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி நிக்கின்றது. இந்தத் தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை மீண்டும் நசுக்கும் செயலாகும்.

இலங்கை அரசாங்கத்தின் உயர்நிலையில் இருப்பவர்கள் போர்க்குற்றங்கள் புரிந்திருப்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும் வகையில் ஐ.நாவின் மூன்று அறிக்கைகள் உள்ளன.

ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கை, உள்ளக ஆய்வறிக்கை, பெட்ரி அறிக்கை எனப்படுவது. இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும், உலகளாவிய மேலுரிமையை இலங்கை தொடர்பில் அனைத்துலக சமூகம் செலுத்த வேண்டும் என ஐ.நா உயர்ஸ்தானிகர் மிசேல் பசலேட் விடுத்த அழைப்பில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் 4 முன்னாள் ஆணையாளர்களும், இலங்கைக்குச் சென்றுவந்த 13 முன்னாள் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களும், இலங்கை தொடர்பான ஐ.நா.பொதுச் செயலரின் வல்லுநர் குழுவில் இடம்பெற்ற 3 உறுப்பினர்களும் இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பக்கோரியிருந்தார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழ் சமூகமும் கடந்த பல ஆண்டுகளாக இதைத்தான் கோரிவருகின்றது.

பெரும் அர்ப்பணிப்புகளால் நிறைந்த தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கைகளுக்கான போராட்டக் களத்தின் வரலாறு மிக நீண்டது. ஆனால், முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான கடந்த 12 ஆண்டுகளில், தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கைகளுக்கான களம் என்பது, அதிக தருணங்களில் தூரநோக்கற்ற, குறுகிய சிந்தனைகளால் நிறைக்கப்படுகின்றது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஈழத் தமிழர்கள், அதிலிருந்து மீள்வது தொடர்பில், ஆக்கபூர்வமான ஒருங்கிணைந்த செயற்பாடுகளைப் பெரும்பாலும் முன்னெடுக்கவில்லை. மாறாக, தங்களுக்கு இடையிலான போட்டி, பொறாமை, தனிப்பட்ட அரசியல் நலன், சுய தம்பட்டப் பேருவகை போன்ற மனநிலையால் கோட்டை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த யதார்த்தம் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் அரங்கேறி சிங்கள தேசத்தை தப்பிக்கச் செய்கின்றது.

கொழும்பில் பிரித்தானிய உயர்மட்ட பிரதிநிதிகளை இரகசியமாகச் சந்தித்த கூட்டமைப்பு உள்ளிட்ட சுமந்திரன், பிரித்தானியா தலைமையில் வெளியிட இருந்த பூச்சிய வரைவுக்கு களம் அமைத்து கொடுத்துவிட்டு எந்த பயனும் இல்லாத கடிதத்தை எழுதிவிட்டு பிரித்தானியா தலைமையில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு வாழ்த்து தெரிவித்தமை யாவரும் அறிந்ததே.

முன்னணியும் முந்தி அடித்து எழுதிய கடிதம் ,சிவில் சமூகம் எழுதிய கடிதம் ,விக்னேஸ்வரன் எழுதிய கடிதம், பத்து கட்சி சேர்ந்து எழுதிய கடிதம், பொது அமைப்புகள் எழுதிய கடிதங்கள் எல்லாமே தாயகத்திலுள்ள மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்காது சிதைத்தமையால் ஒரு கருத்துப்பட தீர்மானத்தை சர்வதேச சமூகம் எடுக்க முடியாமல் தள்ளி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. - என குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். மாநகரின் மத்திய பகுதியில் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை!



யாழ்ப்பாணம் மாநகரின் மத்தியபகுதியில் உள்ளவர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் அவசரக் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

யாழ் மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக யாழ் நகர பகுதியில் அதிகளவான காவல்துறையினர், இராணுவத்தினர், சுகாதார துறையினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றமையைக் அவதானிக்க முடிந்துள்ளது.

# பி.சி.ஆர். பரிசோதனை எண்ணிக்கையை அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது!

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையிலேயே அதிக ஆபத்துள்ள பகுதிகளில் பி.சி. ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்குமாறு அவர் கோரியுள்ளார்.

# மோசடியில் ஈடுபட்ட அனைவருக்கும் மக்கள் சக்தி அரசில் தண்டனை!

*கொழும்பு, மார்ச் 27*

*மோசடியில் ஈடுபட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் தண்டனை வழங்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.*



*கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.*

*குறிப்பாக சீனி மற்றும் எண்ணெய் இறக்குமதியில் இடம்பெற்றுள்ள மோசடியுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனைகிடைக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.*

# தினம் ஒரு விவசாயத் தகவல்

பாக்குச் செய்கையானது பெரும்பாலும் வெப்ப மண்டல காலநிலைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நேரடியாக சூரிய ஒளி படுதல், கடுமையான காற்று என்பவற்றிற்கு எதிராக பாதுகாக்கப்படும். ஈரப்பதமான பகுதிகளில் பாக்குச் செய்கை நன்கு வளர்கின்றன. இளம் தாவரங்கள் நேரடியாக சூரியனுக்கு வெளிப்படுத்துவதன் காரணமாக சூரிய ஒளி ஏற்படுத்தும் மிகுந்த வெப்பமாகும்.

உயர்நிலை - **1000M AMSL** வரையில் நன்கு வளர்கின்றது.
வெப்பநிலை - **24$^o$ – 36$^o$C** வரையில் நன்கு வளர்கின்றது. வெப்பநிலை **10$^o$C** இனை விட குறைவாகவும் **40$^o$C** இனை விட அதிகமாகவும் காணப்படுமாயின் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

மழை வீழ்ச்சி - வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி **1750mm-4500mm** வரையில் காணப்படுகையில் நன்கு வளரும்.

பரந்த மழைவீழ்ச்சியுடன் ஈரமான காலநிலை இதன் வளர்ச்சிக்கு சாலவும் சிறந்தது. பாக்கு மரங்கள் நீடித்த வறட்சிக்கு அதிகம் ஆளாகின்றன. அத்துடன் அத்தனை பிரதேசங்களில் பாக்கு மரங்கள் நிரந்தர அல்லது அரை நிரந்தர நீர் நிலைகளுக்கு அருகே செய்கைப்பண்ணப்படுதல் வேண்டும்.

காற்று - குறைந்த காற்றின் நிலை.

நிழல் - 20-30% உயர் கீழ் மட்டம் பொருத்தமானது. நேரடியாக சூரிய ஒளி படுகையில் இலைகள் மஞ்சள் நிறத்திற்கு மாற்றமடையும்.

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# ‘கொரோனா’ அபாயத்தால் யாழ். மாநகர மத்தி முடக்கம்

## கிருமி நாசினி விசுறும் பணிகள் முன்னெடுப்பு; வீதிகளில் இராணுவம், பொலிஸ் களமிறக்கம்





(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதி வெள்ளி முதல் 10 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கிருமி நாசினி விசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

**யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த நிலையில் நேற்று மாலை மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் அவசரக் கூட்டம் இடம்பெற்றது.**

யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் யாழ். நகரப் பகுதியில் அதிகளவான பொலிஸார், இராணுவத்தினர், சுகாதாரத் துறையினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இன்று களமிறக்கப்பட்டனர்.

# வவுனியா குளத்தைப் பாதுகாக்க மக்கள் அறவழியில் போராட்டம்!



(வவுனியா நிருபர்)

வவுனியா, மார்ச் 26

சுற்றுலா மையம் என்ற பெயரில் ‘வவுனியா குளம்’ ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா குளத்துக்கான மக்கள் செயலணின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

போராட்டத்தில் பொது அமைப்பினர், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

வவுனியாவிலுள்ள குளங்களும் விவசாய நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு தங்களின் கண் முன்னாலேயே அவை இல்லாமல் செய்யப்படுகின்றன என்று போராட்டத்தில் ஈடுபடுவோர் தெரிவித்துள்ளனர்.


வவுனியா மாவட்டத்தின் குடிதண்ணீர் தேவைக்கான நிலத்தடி நீர், விவசாய நீர்ப்பாசனம் மற்றும் கால்நடை வளர்ப் புக்கும் குளங்களே ஆதாரமாக உள்ளன எனவும், இந்நிலையில் சுற்றுலா மையம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளால் குளங்கள் வற்றிப் போகும் அபாயம் உருவாகியுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள் நகர சபையுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மீறிக் கட்டடங்களை அமைத்துள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபடுவோர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வவுனியாக்குளம் மீதான ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும், இல்லாவிட்டால் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (100)

# வடக்குகடற்பரப்பில்கைதான இந்தியமீனவர்கள்விடுதலை

## தூதரகத்தின் அழுத்தத்தையடுத்து



(ந.லோகதயாளன்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைதாகிய 54 இந்திய மீனவர்களில் 40 பேர் அவர்களின் படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மன்னார் மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்பில் கைதானவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணக் கடற்பரப்பில் கைதாகிய 14 மீனவர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையால் அவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி வரை காரைநகர் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படாத கைதாகிய 40 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அழுத்தத்தையடுத்து குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# புத்தூர் அகழ்வாராய்ச்சி மக்களின் கடும் எதிர்ப்பால் இடைநிறுத்தம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்., வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் இன்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சி நடவடிக்கை மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ரதத்தில்அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்காக அதிகாரிகள் இந்தப் பகுதிக்குச் சென்றிருந்த போது, அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றிருந்தனர்.

இந்தநிலையில், மீண்டும் இன்று அங்கு வந்த அதிகாரிகள் நிலத்தைத் தோண்டியுள்ளனர்.

இதன்போது அங்கு கூடிய பொது மக்களும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா



நிரோஷ் உள்ளிட்ட உறுப்பினர்களும் அதற்குக்கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து அகழ்வாராய்ச்சிப் பணிகளை இடைநிறுத்திய அதிகாரிகள் அங்கிருந்து சென்றுள்ளனர்.

# கொழும்பு மாவட்டத்தில் இதுவரை 31,133 பேருக்கு கொரோனா உறுதி

## யாழில் 820 பேருக்குத் தொற்று

கொழும்பு மாவட்டத்தில் இதுவரையில் 31 ஆயிரத்து 133 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் நேற்று 64 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 77 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இம் மாவட்டத்தில் இதுவரை 820 பேர் கொரோனாவுக்கு இலக்காகியுள்ளனர் எனவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சிறிதரன் எம்.பியின் மகன் மீது தாக்குதல்

## யாழிலுள்ள வீட்டில் வாள், இரும்புக் கம்பிகளுடன் இனந்தெரியாத குழு இன்று பிற்பகல் அட்டகாசம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் மூத்த மகன் சாரங்கன் மீது இனந்தெரியாத குழு இன்று பிற்பகல் தாக்குதல் நடத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற்கு அண்மையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குள் வாள், கண்ணாடிப் போத்தல், இரும்புக் கம்பிகளு டன் நான்கு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மறைத்தவாறு வந்த 8 பேர் எம்.பியின் மூத்த மகன் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அவரது மோட்டார் சைக்கிளையும், வீட்டில் இருந்த பொருள்களையும் குறித்த கும்பல் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது

குறித்த குழுவினரின் வீடியோ காட்சிகள் வீட்டில் பொருத்தியிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளன. அவர்கள் வந்திருந்த 4 மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களும் சி.சி.ரி.வி. கமராவில் தெளிவாகப் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் கணக்கின்படி ஐ.நாவில் வெற்றி; ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய படுதோல்வி!

## மனோ கணேசன்

உலகின் கண்காணிப்பு வலயத்தில் மீண்டும் இலங்கை என்ற உண்மையை அரசாங்கம் சிங்கள மக்களிடம் மறைக்க முடியாது எனத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அரசாங்கம் கூறியுள்ள கணக்குப்படி ஐ.நா. வாக்கெடுப்பில் இலங்கை தோற்கடிக்கப்படவில்லை என்றால், ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவும் வெற்றிபெறவில்லையென்றே கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகத் தனது உத்தியோபூர்வ முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள அவர் –

சிங்கள மக்களுக்கு இந்த விடயம் தொடர்பாக எடுத்துக் கூற, முன்னாள் நல்லிணக்க துறைசார் அமைச்சர் என்ற முறையில் தான் கடமைப்பட்டுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையை கண்காணித்து, இலங்கை தொடர்பாக வாய்மொழி அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்டோபரிலும் எழுத்து மூல அறிக்கையை அடுத்த வருடம் பெப்ரவரி அல்லது மார்ச்சிலும் சமர்ப்பிக்கும்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தை கோரியுள்ளது

இதையடுத்து, இலங்கை திருந்தாவிட்டால் பொறுப்புகூறல் தொடர்பாக அடுத்து எடுக்கப்பட வேண்டிய காத்திரமான நடவடிக்கைகளை அடுத்த வருடம் செப்ரெம்பர் அல்லது ஒக்டோபரில் சிபாரிசு செய்யும்படியும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

இதனை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் இன்று கண்ணைக் கட்டி கணக்கு வித்தை காட்டுகிறது என விமர்சித்துள்ள மனோ, தமக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளையும் வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாத நாடுகளையும் கூட்டிக்காட்டி ஐ.நா. தீர்மானம் தோற்றுவிட்டது எனக் கூறுவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற வாக்குகள் சுமார் 69 லட்சம். அவருக்கு எதிராக வாக்களித்த, வாக்களிக்காத, ஒட்டுமொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் தொகை சுமார் 90 லட்சமாகும்.

ஆகவே வாக்களிக்காதவர்களும் நம்மவரே என்ற அரசாங்கத்தின் கணக்கின்படி, கோட்டாபய ராஜபக்ஷ உண்மையில் தோல்வியடைந்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

ஆகவே, அவர் அரசியலைவிட்டு வீட்டுக்கு போக வேண்டுமோ? என்ற கேள்வியை வெளிவிவகார அமைச்சர், தினேஷ் குணவர்தனவிடம் கேட்க விரும்புகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதற்கட்டமாக பன்னிரெண்டு விசேட ஊழியர்கள், இலங்கை கண்காணிப்பு தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தில் நியமிக்கப்பட உள்ளார்கள்.

மேலும் இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க சுமார் 29 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அலுவலகம் ஐ.நா. பொதுசபையைக் கோரியுள்ளது.

இதன்மூலம், சாட்சியம், தகவல் ஆகியவற்றைச் சேகரிக்கும் கண்காணிக்கும் நடவடிக்கைகளை அலுவலகம் ஆரம்பிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்புக் கூறல், நீதி விசாரணை, தண்டனை, நஷ்டஈடு, காணாமல் போனோர் அலுவலகம் சுயாதீனமாகச் செயற்படல், அரசியல் தீர்வு, மாகாணசபைத் தேர்தல், பன்மைத்துவம் ஏற்பு ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் இனியும் சர்வதேசத்துடன் முரண்பட முடியாது என்றும் மனோ சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தகைய பிற்போக்கு அரசியல் விளையாட்டுக்கு இனி கால அவகாசமும் இல்லை என்றும் அதற்கு இது உள்நாட்டு மைதானமும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சமயத் தலைவர்கள் ஒன்றுகூடல் ஒத்திவைப்பு

இலங்கை பல்சபாய கருத்தாடல் நிலைய சகவாழ்வுச் சங்கத்தால் 27.03.2021 சனிக்கிழமை மாலை 2 மணிக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. பிரதான மண்டபத்தில் நடைபெறவிருந்த பல்சபாயத் தலைவர்களுக்கிடையிலான விசேட கருத்தாடல் நிகழ்வு நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெறமாட்டாது என்றும் மேற்படி ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகையே அச்சுறுத்தும் கொரோனாவில் இருந்து பாதுகாக்க நடைமுறையிலுள்ள சுகாதார நடைமுறைகளை மக்களை இறுக்கமாக பின்பற்றுமாறும் –

பல்சமயத்தவர்களிடையே ஒற்றுமையையும் சமாதானத்தையும் வலுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுமாறும் –

விசேடமாக தேர்தல் காலங்களிலும் ஏனைய காலங்களிலும் சமயங்களுக்கிடையில் நல்லிணக்கத்திற்கு பாதகமான பிரச்சாரங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

# ஆனந்தசுதாகரனின் காணியை மோசடி செய்யவில்லையாம்!

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் காணி ஆவணங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் உரிமையாளரின் பெயருக்கு மோசடியான முறையில் மாற்றப்பட்டிருப்பதாக ஆனந்த சுதாகரனின் சகோதரி கடந்த நாள்களில் குற்றம்சாட்டியிருந்தார்.

கிளிநொச்சி – பாரதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் இரணைமடு பகுதியிலுள்ள காணியே போலி ஆவணங்களை பயன்படுத்தி மோசடி செய்யப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், குற்றம்சாட்டப்பட்ட ஹோட்டல் உரிமையாளர் இதனை அடியோடு நிராகரித்ததோடு, இதனை முறையாகப் பெற்றதற்கான ஆவணங்களும் தம்வசம் உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

# வவுனியா நகரசபை குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாம்!

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் நகரபிதா

வவுனியா சுற்றுலாமைய விடயத்தில் நகரசபையின் குத்தகை ஒப்பந்தம், குத்தகையாளரால் மீறப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

வவுனியா சுற்றுலாமைய விவகாரம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வவுனியாவில் நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா மாவட்ட மக்களுக்கான பொழுதுபோக்கு மையம் ஒன்றை அமைத்திருந்தோம்.

இவ்வாறு அமைக்கப்பட்ட பொழுதுபோக்குமையத்தைக் கேள்விகோரல் மூலமாக ஒருவருக்குக் குத்தகைக்கு வழங்கியிருந்தோம்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியாவுக்குள் கமக்கார அமைப்பின் ஊடாக நகரசபைத் தலைவர், செயலாளர், நீர்ப்பாசன திணைக்களத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் இந்த வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை குறித்த குத்தகைதாரருக்கு எங்களது அனுமதி இல்லாமல் கட்டடங்களை அமைக்க முடியாது போன்ற பல்வேறு நிபந்தனைகளை விதித்திருந்தோம். அந்த நிபந்தனைகளை குத்தகை தாரர் மீறியிருக்கிறார். புதிய கட்டுமானங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

அந்த புதிய கட்டடங்களைக் கடந்த 15 ஆம் திகதிக்கு முன்பாக அகற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கியும், அது அகற்றப்படாமல், எமது அனுமதியின்றி மறுநாள் மேலும் கிரவல்மண்கள் அந்தப்பகுதிக்குள் கொட்டப்பட்டிருந்தது. அவற்றை அகற்றுவதற்காக நகரசபை ஊழியர்களையும் இயந்திரங்களையும் அனுப்பிவைத்த போது, உட்செல்லமுடியாதபடி சுற்றுலாமையத்தின் பிரதானகதவு மூடப்பட்டிருந்தது. இவை அனைத்தும் எமது ஒப்பந்தத்தை மீறும் செயல்களே.

எனவே எம்மால் அனுமதி வழங்கப்படாமல் அமைக்கப்பட்ட அனைத்து கட்டடங்களையும்) அகற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

அதற்குள் அகற்றாதுவிடின் எதிர்வரும் 29 ஆம் திகதி அதனை அகற்றுவதற்கு நகரசபை நடவடிக்கைகளை எடுக்கும். நகரசபை அதனை அகற்றினால் குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டி அவரது ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு மீள கேள்விகோரப்பட்டு வேறு நபர்களுக்கு வழங்கப்படும். குறித்த சுற்றுலாமையம் தொடர்பாக வவுனியாவில் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

போராட்டம் மேற்கொள்வது அவர்களது உரிமை. ஆனால் இந்த விடயத்தில் உண்மைத்தன்மையை கூறவேண்டிய கடமை ஒன்று இருக்கிறது.

வர இருக்கும் தேர்தலை மையப்படுத்தியும் தங்களை பிரபல்யபடுத்துவதற்காகவும் அரசியல் காழ்புணர்சி காரணமாகவே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இதன் உண்மைத்தன்மையை மக்களுக்கு வெளிப்படுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் 2 ஆயிரத்து 200 லோட் கிரவல் மண்ணை குளத்திற்குள் கொட்டியதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அது ஒரு பொய்யான வேடிக்கையான பிரச்சாரம். பொய்களை மக்களுக்கு கூறாதீர்கள். எமக்கு வழங்கப்பட்ட பகுதிக்குள்ளேயே நாம் அபிவிருத்திகளை செய்துள்ளோம். 2,200 லோட் மண் போட்டிருந்தால் குளத்தின் பெரும்பகுதியே மூடப்பட்டிருக்கும். – என்றார்.

# இலங்கையர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்குக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து!

சர்வதேச அளவிலான விதி மீறல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தேசிய நீதிமன்றங்கள் ஊடாக சர்வதேச குற்றங்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதை உறுப்புநாடுகள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பில் நேற்று (வியாழக்கிழமை) கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல், பொறுப்புக் கூறல் மற்றும் நீதி ஆகியவற்றைப் பெற உதவும் வெற்றியாகும் எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தீர்மானத்தைக் கொண்டு வருவதற்காக பிரசாரம்செய்த செயற்பாட்டாளர்களுக்கு எதிரான எந்தவொரு பழிவாங்கலும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐ.நா. மற்றும் உறுப்பு நாடுகள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வலியுறுத்த வேண்டும் என அந்த கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் 46/1 தீர்மானம், இலங்கை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளைக் கண்காணித்து சர்வதேச குற்றங்களின் ஆதாரங்களைச் சேகரிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஒரு புதிய பொறுப்புக்கூறல் செயன்முறையை நிறுவுகிறது. இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது.

இதனையடுத்து, சமீபத்திய மாதங்களில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக ஏராளமான அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன எனவும் அந்தக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியவும் பொறுப்புள்ளவர்களைக் கணக்கில் கொள்ளவும் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் முக்கிய தீர்மானம், இலங்கையில் நீதி மறுக்கப்பட்டால், இதற்குப் பொறுப்புக்கூறலை ஏற்படுத்த ஐ.நா. முன்வரும் என்பதைக் காட்டுகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவா இயக்குநர் ஜான் ஃபிர் கூறியுள்ளார்.

அதேநேரம், இலங்கையைப் போலவே பல அரசாங்கங்களும் தங்கள் சர்வதேச சட்டக் கடமைகளை மதிக்கத் தவறும்போது மனித உரிமைகள் பேரவை இது போன்ற கணிசமான நடவடிக்கைகளை முன்னெடுத்து பதிலளிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## பாட்டும் நானே....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**8. கேள்வி:-** ஏப்ரல் 21 தேவாலயக் குண்டு வெடிப்பு?

**பதில் :-**வெளிவரும் செய்திகள் அதிர்ச்சி தருவனவாய் இருக்கின்றன. யாரோ ஒரு தீவிரவாதக் கும்பலால் நிகழ்த்தப்பட்ட தாக்குதலாய்த்தான் இதனை நினைத்திருந்தோம். ஆராய ஆராய வெளிவரும் செய்திகள், போன நல்லாட்சி (?) அரசாங்கத்தின் அதி உயர் பதவியாளர் வரை ஐயப்பட வைத்திருக்கின்றன. முஸ்லிம்களைக் குற்றவாளிகளாய்க் காட்டுவதன் மூலம் அவர்களின் வளர்ச்சியைத் தடுத்துவிடலாம் என சிலர் நினைத்திருக்கிறார்கள் போலத் தோன்றுகிறது. அதனால் அங்ஙனம் நினைத்தவர்களே இத்தாக்குதல்களைத் திட்டமிட்டிருப்பார்களோ எனும் ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அமைக்கப்பட்ட விசாரணைக் 'கமிஷன்', விடயங்களை முழுமையாய் ஆராய விரும்பவில்லை என்பதை, ஆண்டகட்சியும் ஆளுங்கட்சியும் ஒருவர் மேல் ஒருவர் சாட்டும் குற்றங்களை வைத்து ஊகிக்க முடிகிறது. சரியான உண்மை வெளிப்படுகிற போது (வெளிப்படவிடுவார்களா?) நம் நாடு மட்டுமல்ல உலகமும் அதிரத்தான் போகிறது போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'இயேசுவே பாவிகளை மன்னிப்பீராக. ஆமென்!'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு. தி. பொன்னம்பலவாணர் ஐயா



பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் அர்ச்சகருமாகிய பண்டிதர் திரு.தி. பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள் நேற்று (26.03.2021) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் பொன்னுத்துரை - தியாகராஜா ஐயா - காமாட்சி தம்பதிகளின் மூத்த மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தர் மடத்தைச் சேர்ந்த அமரர்களான கனகசபாபதி அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசி, ஞானம்பிகை, வடிவாம்பிகை, அருண்மொழித்தேவர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கந்தையா, ஸ்யாமளா, காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, பாலசுப்பிரமணியம், தில்லைராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், Dr.மயூரேசனின் சித்தப்பாவும், திவ்யா, சௌமியா, தனஜா, விதுஜா ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்ற ஞானபூரணி, கணேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற கேதீஸ்வரன், மாதங்கி, நர்த்தனன், வித்தகன், சுபாங்கி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நடைபெற்று பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்**

---

அவுஸ்திரேலியாவில் உயர்கல்வியைத் தொடர அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

*Courses available:*

Diploma | Bachelor Degree | Master Degree

- Business
- Hospitality
- Information Technology
- Engineering and
- Nursing

**கிடைக்கப்படும் நன்மைகள்:**

- படித்துக்கொண்டே ஒரு வாரத்தில்20 மணிநேரவேலைக்கான அனுமதி உண்டு
- பட்டபடிப்பை நிறைவுபெற்று 18 மாத வேலை செய்வதற்கான அனுமதி உண்டு

தொடர்புக்கு: HOTLINE: 0766228891

Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo - 13
0112437285
Email: sl.austvisa@gmail.com

---

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

---

# CNR world wide Express

Courier & Cargo

International Courier & Cargo Service.



- உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
- அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.

இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

---

Anna EXPRESS Courier Services



# அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

077 8889388
075 3305500
070 3305500

லண்டன் ⇨ 1000/=

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |

---

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களின்

# ZOOM இன் ஊடான புலமைப் பரிசில் வகுப்புக்கள்

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை , யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் மற்றும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஆகிய பிரபல பாடசாலை ஆசிரியர்களின் ஒன்றிணைந்த கற்பித்தல்

| | |
|---|---|
| மாதாந்தம் கட்டணம் 1000/= | 05 ஆசிரியர்களின் 45 மணி நேர வகுப்புக்கள் (தினமும் மாலை 7.00 – 8.30 வரை)<br>நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட முன்வைப்புக்களின் ஊடான கற்பித்தல்<br>ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நிகழ்நிலைப் (Online) பரீட்சை |

குறித்த ஆசிரியர்களின் தரம் 3 , 4 மாணவர்களுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றது

உங்கள் பிள்ளைகள் பல ஆசிரியர்களிடம் ஒரே இடத்தில் ஒரே கட்டணத்தில் கற்பதால் ஏற்படும் நன்மைகளை எண்ணிப்பாருங்கள்

தொடர்புகளுக்கு 076 432 5688

---

# இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையில் கனேடியத் தூதுவர்

கனேடிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (National Languages Equality Advancement Project (NLEAP) முன்னேற்றம் தொடர்பில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிற் மக் கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று கலந்துரையாடினார்.



நேற்று மாலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த கனேடியத் தூதுவர் டேவிற் மக் கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.



தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலை, திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆரயப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் முடிவில் முடிவில், கனேடியத் தூதுவருக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.



# மிகக்குறைந்த நட்பு நாடுகளையே தக்கவைத்துள்ளது ராஜபக்ஷ அரசு

## ஐ.நா. தீர்மானத்தை சுட்டிக்காட்டி சாடுகின்றார் சஜித் அணி எம்.பி.

சர்வதேச அரங்கில் மிகவும் சொற்பளவான நட்பு நாடுகளையே ராஜபக்ஷ அரசு தக்கவைத்துள்ளது என்பதை அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட புதிய தீர்மானத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் வெளிப்படுத்தியுள்ளன.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

மிக மோசமான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தற்போது மோசமான வெளிநாட்டுக்கொள்கைகளை நோக்கி ராஜபக்ஷ அரசு நகர்ந்திருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:– ராஜபக்ஷக்கள் தலைமையிலான இலங்கை அரசு தற்போது ஒரு நெருக்கடியிலிருந்து மற்றுமொரு நெருக்கடிக்கு உட்பட்டிருக்கின்றது.

மிக மோசமான பொருளாதார நிர்வாகம், கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் கையாளப்பட்ட மோசமான உத்திகள் ஆகியவற்றிலிருந்து இப்போது பேரழிவு தரும் வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கி அரசு நகர்ந்திருக்கின்றது.

போர் முடிவடைந்ததன் பின்னரான காலப்பகுதியில், இப்போதுதான் வெளிநாட்டுக் கொள்கை மிகவும் மோசமான மட்டத்தில் பேணப்படுகின்றது என்று கூறமுடியும்.

கடந்த 2009ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் மாத்திரமன்றி கடந்த 16 மாத காலத்தில் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைச் சரிசெய்வதற்கு அதிக முக்கியத்துவமளிக்கும் விதமாகவே ஐ.நாவின் புதிய தீர்மானம் அமைந்துள்ளது.

கொள்கைகளை வகுப்பதற்கான பொறுப்புக்குப் பொருத்தமற்ற நபர்களை நியமித்ததன் விளைவாக, கொள்கை அடிப்படையில் அரசு தோல்வியைத் தழுவியுள்ளது.

சுகாதார நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானரீதியில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாலேயே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கையாளப்பட்டிருக்க வேண்டும்.

அதேபோன்று வெளியுறவுக் கொள்கைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மூலமே இராஜதந்திர ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்நிலையில், ஐ.நாவின் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய சவால்களையும் பாதகமான தாக்கங்களையும் எதிர்கொள்வதற்கும் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கும் அவசியமான புதிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

அதேவேளை, இலங்கை குறித்த கடந்த கால அறிக்கைகளில் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதுடன் சர்வதேச சமூகத்தின் கரிசனைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலான உள்ளகப் பொறிமுறைகளை அமுல்படுத்துவது அவசியமாகும்.

நல்லிணக்க செயன்முறையைப் பொறுத்தவரையில் கடந்த கால சம்பவங்கள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதென்பது மிகவும் முக்கியமானதாகும்.

நாட்டு மக்கள் மீதான அக்கறையுடன் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு செயற்திறனான நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஆதரவை வழங்குவதற்கு எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் தயாராக இருக்கின்றோம் – என்றுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org